## இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.1.4.B

பின்னங்கள் - வேற்றின பின்னங்கள் - பயிற்சி

## பின்னங்கள் - வேற்றின பின்னங்கள் - பயிற்சி

கலைச்செல்வி தமிழ்ச்செல்வி அருட்செல்வி ஆகிய மூவரும் சகோதரிகள். அவர்களுடைய தந்தை அவர்களுக்கு ஒரு போட்டி வைத்தார். அவர்கள் வீட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து தொட்டியில் நிரப்பவேண்டும். கூடுதல் நிரப்புபவருக்கு **பாரதியார் பாடல்கள் அடங்கிய புத்தகம்** வாங்கித்தருவதாகவும் பரிசினை அறிவித்தார். அவர்களிடம் இருந்த குடங்கள், தொட்டியின் அளவில் முறையே 1/36,1/27 மற்றும் 1/54 அளவு நிரப்பக்கூடியவை. அவர்கள் மூவரும் முறையே 9, 7 மற்றும் 13 குடங்கள் தண்ணீர் நிரப்பினர்.

வினா (a) என்றால், அந்தச் சகோதரிகளில் யார் கூடுதல் தண்ணீர் நிரப்பி தந்தையிடமிருந்து பரிசைப்பெறுவர்?

வினா(b) போட்டியின் முடிவில், தொட்டியில் எவ்வளவு தண்ணீர் நிரம்பியிருக்கும்?

**முதலில் நாம் விடைகாணும் படிகளை இங்கே எழுதிக்கொள்ளுவோம்.**

1. குடங்களின் அளவுகள் வேற்றின பின்ன வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.
2. முதலில் அவற்றை ஓரின பின்னங்களாக மாற்ற வேண்டும்.
3. அவ்வாறு மாற்றிய பின் அவற்றை தண்ணீர் நிரப்பிய எண்ணிக்கை கொண்டு பெருக்கினால், ஒவ்வொருவரும் நிரப்பிய தண்ணீரின் அளவு நமக்குக் கிடைத்து விடும்.
4. இதிலிருந்து நமக்கு முதல் வினாவிற்கு விடை கிடைத்துவிடும்.
5. மூன்று பெருக்குத் தொகையையும் கூட்டினால் நமக்கு இரண்டாம் வினாவிற்கு விடை கிடைத்துவிடும்.

| கலைச்செல்வி | தமிழ்ச்செல்வி | அருட்செல்வி |
|---|---|---|
| | படி 1 | |
| $\frac{1}{36}$ | $\frac{1}{27}$ | $\frac{1}{54}$ |
| | படி 2 :: மீ.சி.ம = 108 | |
| $\frac{3\times1}{108}$ | $\frac{4\times1}{108}$ | $\frac{2\times1}{108}$ |
| $\frac{3}{108}$ | $\frac{4}{108}$ | $\frac{2}{108}$ |
| | படி 3 | |
| $\frac{3\times9}{108}$ | $\frac{4\times7}{108}$ | $\frac{2\times13}{108}$ |
| $\frac{27}{108}$ | $\frac{28}{108}$ | $\frac{26}{108}$ |

படி 5

$$\frac{27}{108}+\frac{28}{108}+\frac{26}{108}=\frac{81}{108}=\frac{3}{4}$$

படி 4 (a) தொட்டியில் 28/108 பங்கு நிரப்பிய **தமிழ்ச்செல்வியே** வெற்றிபெற்றவராவார்.

படி 5 (b) போட்டியின் முடிவில் தண்ணீர் தொட்டி, $\frac{3}{4}$ அதாவது **முக்கால் அளவு** நிரம்பியிருக்கும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 15th February, 2022 :: 18:22 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.